**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**

**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW5:** திரு.வெங்கடேசன் (மருத்துவர்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், பெண்டரஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.02.2015 ம் தேதியன்று மதியம் 02.55 மணிக்கு தருமபுரி GH ல் அவசர சிகிச்சை பிரிவில் நான் பணியில் இருந்தபோது சுந்தரம்மாள் 45, க.பெ.கோவிந்தசாமி என்பவர் அவராகவே சிகிச்சைக்காக வந்தார். அவர் அவருக்கு தெரிந்த நான்கு நபர்கள் 18.02.2015 அன்று மதியம் 12.00 மணியளவில் அவருடைய இருப்பிடத்தில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

2) காயம் எண்.1 பின்னங்கழுத்தில் தொடு வலி இருந்தது. காயம் எண்.2 இடது பக்க இடுப்பில் தொடு வலி இருந்தது. அவரை சிகிச்சைக்காக உள்நோயாளி பிரிவில் சேர்த்தேன். உள்நோயாளி பிரிவில் வலது மணிக்கட்டு மற்றும் கழுத்து பகுதியில் நுன்கதிர் படம் எடுக்கப்பட்டு அதில் எந்த வித எலும்பு முறிவு இல்லை என்று நுன்கதிர் பட நிபுனரால் கருத்துரு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று நான் காய சான்று வழங்கினேன். **சுந்தரம்மாளுக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று அ.சா.ஆ.2** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஒரு நபர் கரடு முரடான பாதையில் ஓடி கீழே விழுந்தால் நான் மேலே சுந்தரம்மாள் என்பவருக்கு ஏற்பட்டதாக சொல்லக்கூடிய காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்று கேட்டால் வாய்ப்புள்ளது. சுந்தரம்மாள் அவருக்கு வலி இருப்பதாக பாசாங்கு செய்ய வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. சுந்தரம்மாளுக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை.

**அரசு தரப்பில் மறு விசாரணை - இல்லை.**

**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**
**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW6:** திரு.சின்னசாமி

**முதல் விசாரணை**

1) நான் குட்டூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுந்தரம்மாளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் புகார்தாரர் எனது பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு காலை 09.30 – 10.00 மணிக்குள் கூச்சல் சத்தம் கேட்டது. நான் என் தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது பக்கத்து தோட்டத்தில் அவர்களுக்குள் ஏதோ தகராறு என்று நினைத்தேன். பின்னர், அவர்கள் தோட்டத்திற்கு ஒரு ஆமினி வேன் வந்தது. கூச்சல் சத்தம் கூடுதலாக கேட்டதால் அவர்கள் தோட்டத்திற்கு சென்று பார்த்தேன். இவ்வழக்கின் புகார்தாரரை 5 நபர்கள் ஒன்றாக கூடி அடித்துக் கொண்டிருந்தார்கள். சம்பவம் நடந்து 7-8 வருடங்கள் ஆனதால் என்னால் அவர்களை அடையாளம் காட்ட இயலாது.

2) நான் தகராறை விளக்கிவிட்டதால் என்ன பேசினார்கள் என்று குறிப்பிட்டு கூற இயலவில்லை. நான் சம்பவத்தை விளக்கிவிட்டவுடன் அங்கிருந்தவர்கள் ஆம்னி வேனை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். பின்னர் சுந்தரம்மாளின் மகனை அழைத்து சுந்தரம்மாளை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொல்லி வந்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆம்னி வேனின் வாகன எண், கலர் குறித்து எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் யார் யாரை தாக்கினார்கள் என்று எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இவ்வழக்கு சம்பவத்தின்போது நான் பிரச்சனையில் இருந்து விளக்கியவர்களை பற்றி சொல்ல முடியுமா என்று கேட்டால் அவர்கள் வெளியூர்காரர்கள் ஆவார்கள். அதை பற்றி குறிப்பிட்டு சொல்ல முடியாது.

**அரசு தரப்பில் மறு விசாரணை - இல்லை.**

**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**
**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW7:** திரு.வேடியப்பன்

**முதல் விசாரணை**

1) நான் மேலாண்டிபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுந்தரம்மாளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் புகார்தாரர் எனது பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு காலை 09.30 – 10.00 மணிக்குள் கூச்சல் சத்தம் கேட்டது. அங்கு நான் செல்வதற்குள் தகராறை விளக்கி கொண்டிருந்தார்கள். போகும்போது பார்த்துக் கொண்டே சென்றேன் தகராறு நடந்தது. சின்னசாமி தகராறை விளக்கிவிட்டார். அதன் பின்பு எதிரிகள் சென்றுவிட்டனர். சுந்தரம்மாளை அவரது மகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார், அதை நான் பார்த்தேன். கூச்சலிட்டுக் கொண்டிருந்த நான்கு நபர்கள் சம்பவ இடத்தில் இருந்து திரும்பி வந்தபோது பெரியபையன் என்பவரை பார்த்து கையில் வைத்திருந்த கத்தியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். நான் அந்த கத்தியை பிடிங்கி கீழே போட்டு சமாதானம் செய்து வைத்தேன். 3 நபர்கள் ஓடிவிட்டார்கள், இரண்டு நபர்கள் மட்டும் அங்கு அமர்ந்திருந்தார்கள். சம்பவம் நடந்து 8 வருடங்கள் ஆவதால் எதிரிகளை என்னால் அடையாளம் காட்ட இயலாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சம்பவம் முடியும் சமயத்தில்தான் நான் பார்த்தேன். இவ்வழக்கு சம்பவம் நடந்த அன்று நான் டிராக்டர் ஓட்டி கொண்டு என் வயலில் இருந்தேன். என் வயலுக்கும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சுமார் 250 அடி தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் வீரபத்திரனின் மகன்கள் இருந்தார்கள். அவர்களுடன் சில நபர்கள் வந்தார்கள். என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, ஆனால் நேரில் பார்த்தால் சொல்வேன்.

2) சுந்தரம்மாளுக்கும், வீரபத்திரன் என்பவருக்கும் உரிமையியல் தொடர்பாக

வழக்கு நிலுவையில் இருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. டிராக்டர் ஓட்டி வந்தவர்களின் விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் அவர்கள் வெளியூரை சேர்ந்தவர்கள். நான் போலீஸ் விசாரணை சாட்சியத்தில் மேற்கூறிய விவரங்களை பற்றி சொல்லவில்லை. நான் தற்போது இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சுந்தரம்மாளுக்கும், வீரபத்திரனின் மனைவிக்கும் நிலம் தொடர்பாக முன் விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது சுந்தரம்மாள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். சுந்தரம்மாளை நான் மருத்துவமனைக்கு செல்ல சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவம் நடந்த இடத்தில் எங்கள் ஊர்காரர்கள் சின்னசாமி இருந்தார். இவ்வழக்கு சம்பவத்தின்போது சுந்தரம்மாள் என்பவர் தாக்கி இவ்வழக்கின் எதிரி பாலதண்டாயுதத்திற்கு காயம் ஏற்பட்டதாக நான் பின்னர் தெரிந்து கொண்டேன். எதிரி பாலதண்டாயுதமும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. ஆம்னி காரின் நெம்பர், அது யாருக்கு சொந்தமானது என்பது பற்றி நான் தெரிந்துகொள்ளவில்லையா என்று கேட்டால் தெரிந்துகொள்ளவில்லை.

4) இந்த சம்பவம் யாருடைய இடத்தில் நடந்தது என்று கேட்டால் பெரியபையன் என்பவரின் நிலத்தில் நடந்தது. நான் மேற்சொன்ன விவரத்தை போலீசார் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லியுள்ளேன். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னர் பாலதண்டாயுதம், வீரபத்திரன் ஆகியோர்களை பற்றி எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். சுந்தரம்மாளுக்கு பாலதண்டாயுதம், வீரபத்திரன் ஆகியோர்கள் உறவினர் என்ற விவரம் எப்படி எனக்கு தெரியும் என்றால் நானும், சுந்தரம்மாளும் பக்கத்து நிலத்துக்காரர்கள் அதனால் எனக்கு தெரியும். சுந்தரம்மாள் எனக்கு உறவினர் இல்லை. சுந்தரம்மாள் எனக்கு வேண்டப்பட்டவர் இல்லை. சுந்தரம்மாள் எனது பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) நடக்காத ஒரு சம்பவத்தை பற்றி திரித்து நான் சுந்தரம்மாளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை - இல்லை.**

**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**
**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW1:** திருமதி.சுந்தரம்மாள்

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வீரபத்திரன், பாலதண்டாயுதம் எனக்கு என்ன உறவு முறை என்றால் வீரபத்திரன் என் அண்ணன், பாலதண்டாயுதம் என் அண்ணன் மகன் ஆவார். எங்களுக்கும், வீரபத்திரனுக்கும் நிலம் தொடர்பாக தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் OS.No.286/2014 வழக்கு உள்ளது என்றால் சரிதான். இது தொடர்பாக எங்களுக்கும், வீரபத்திரன் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும்.

2) நானும், என் கணவர் மட்டும்தான் இருந்தோம். நான் தருமபுரி GH ல் சேரும்போது என் சின்ன மகன் என்னுடன் இருந்தார். என்னுடைய சின்ன மகன்தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார். என்னை போலீசார் விசாரித்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் என்னுடைய சின்ன மகன் இருந்தார். நான் மேற்சொன்ன விவரத்தை போலீசார் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நான் மயக்க நிலையில் இருந்தேன் எனக்கு தெரியவில்லை. நான் மேற்சொன்ன விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றெல்லாம் எனக்கு தெரியாது. எந்த போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. நான் மயக்க நிலையில் இருந்ததால் போலீசார் என்னிடம் என்ன எழுதி வாங்கினார்கள் என்றும் தெரியாது.

3) சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு இரண்டு நாட்கள் கழித்துதான் எனக்கு மயக்கம் தெளிந்தது.

**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**
**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW2:** திரு.கோவிந்தசாமி

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் கைரேகைதான் வைப்பேன் என்றால் கையெழுத்து போட தெரியும். இச்சம்பவம் குறித்து போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என் வீட்டிற்கும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் நிலம் சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு நிலத்தை பாலதண்டாயுதமும், வீரபத்திரனும் ஓட்டி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. வீரபத்திரன் அவருக்கு சொந்தமான நிலத்தை ஓட்டி வந்ததை நாங்கள் தடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல.

2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நிலம் என் அம்மா பெயரில் உள்ளது. இவ்வழக்கு சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் சம்பவம் நடந்த உடனே நாங்களும் காவல் நிலையத்திற்கு சென்றோம், எதிரிகளும் காவல் நிலையத்திற்கு சென்றார்கள். நாங்கள் தாக்கியதில் வீரபத்திரன் மற்றும் பாலதண்டாயுதம் ஆகியோர்கள் மருத்தவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்று சொன்னால் நாங்களும் மருத்துவமனைக்கு சென்றோம், அவர்களும் சென்றார்கள். இது தொடர்பாக எங்கள் மீதும், எதிரிகள் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். எங்கள் மீதுள்ள வழக்கு என்ன ஆனது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**
**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW3:** திரு.பெரியபையன்

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தின்போது அரியகுளத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு என் மனைவி தகவல் சொன்னார். நான் வழக்கு சம்பவம் முடியும் சமயத்தில் சென்றேன். என்னுடைய அம்மாவை என்னுடைய தம்பி சத்தியராஜ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நிலம் தொடர்பாக வழக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். நிலம் தொடர்பாக எங்களுக்கும், எதிரிகளுக்கும் மனஸ்தாபம் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் அவர்கள் ஓட்டிக் கொண்டிருந்த நிலத்தை நாங்கள் தடுத்தோம் என்றால் சரியல்ல.

2) காலம் காலமாக எதிரிகளின்தான் நிலத்தை ஓட்டி வந்தார்கள் என்றாலும், நாங்கள் அதை தடுத்து பிரச்சனை செய்தோம் என்றாலும் சரியல்ல. பாலதண்டாயுதம், வீரபத்திரன் ஆகியோர்கள் தருமபுரி GH ல் சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணாபுரம் போலீசார் எங்கள் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை தாக்கியதாக எங்கள் மீது ஒரு வழக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**CC.No.88/2015 (JM.No.II, DHARMAPURI.)**

**06.06.2024**

சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.

**PW4:** திரு.சத்தியராஜ்

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தருமபுரி GH க்கு அழைத்து சென்றபோது என் அம்மா மயக்க நிலையில் இருந்தார். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் வீட்டருகில் இல்லை, தருமபுரியில் இருந்தேன். நான் போய் பார்க்கும்போது இவ்வழக்கு சம்பவம் முடிந்தது என்று சொன்னால் நான் சென்று பார்க்கும்போது ஆட்கள் இருந்தார்கள், என் அம்மா மயக்க நிலையில் இருந்தார். நான்தான் என் அம்மாவை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தேன். அம்மாவுடன் நான்தான் மருத்துவமனையில் இருந்தேன். அங்கு போலீசார் வந்தார்களா என்றால் வந்தார்கள். அப்போது என் அம்மா அறை மயக்கத்தில் இருந்தார்.

2) என் அம்மாதான் இவ்வழக்கிற்கான புகாரினை கொடுத்தார். அந்த புகாரினை என் அம்மாதான் போலீசாரிடம் சொன்னார். நானும், என் குடும்பத்தினரும் சேர்ந்துதான் போலீசாரிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை சொன்னோம். எந்த போலீசார் புகார்வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. புகார் வாக்குமூலம் சொல்லுமபோது என்னை பற்றியும், என்னுடைய பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் பற்றியும் வாக்குமூலங்கள் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அதில் எங்களின் பெயர்களை போலீசார் எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக் கொண்டார்கள். நான் மருத்துவமனையில் கையொப்பம் செய்தேனா என்று எனக்கு நியாபகம் இல்லை. என் அம்மா மருத்துவமனையில் கையொப்பம் செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) எங்களுக்கும், எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக நான் என் அம்மாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.